தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

THE WORD OF CHRIST




## எலியா

## Elijah

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 14 ஜூலை 2014 கனி 8

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office
on 10 th July 2014

Owned and published by B. Arjunan from 17.2.102
D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed
by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24
Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

BATLAGUNDU CHURCH OF CHRIST
MEETS HERE
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

To

"பயப்படாதே; அவர்களோடிருப்பவர்களைப்பார்க்கிலும்
நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான்"
2இராஜாக்கள் 6:16

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

## புதிய வெளியீடு




*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor:**
**B.ARJUNAN**

**Associate Editors:**
**S.Reagan**
**A.Kanagaraj**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட் அவர்களின் செய்தி
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட் அவர்களின் வேதபாடம்
உதவி எழுத்தாளரின் செய்தி
மற்றும்
வாலிபர் பகுதி
பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி
வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 167

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடையை வசன ஆதாரத்துடன் எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும்.

1. உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது எதினால் உண்டாயிருக்கும்?
2. கண் ஊனமானதைப் பலியிடக்கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல என்றவர்கள் யார்?
3. எங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்?
4. ஒரே நாளில் விருத்தசேதனம் பெற்ற தகப்பனும் மகனும் யார்?
5. எரிகோவில் ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த மனுஷன் யார்?
6. உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிபோடும் என்ற தேவமனுஷன் யார்?
7. உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே என்று எவரைப்பார்த்து சொன்னார்கள்?
8. அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடி, குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள் அவர்களாலே என்னசெய்யப்படவேண்டாம் என கர்த்தர் எச்சரித்தார்?
9. யாசோன் எவர்களை ஏற்றுக்கொண்டான்?
10. உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள் என்று எந்த தீர்க்கன் மூலம் கர்த்தர் பேசினார்?

## எலியா Elijah

- எலியா என்றால் 'யாவே என் தேவன்' என்று அர்த்தம் (My God is Yahweh)
- எலியாவின் நாட்களில் மூன்று வருஷம் 6 மாதம் வானம் அடைபட்டு தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தது (லூக்.4:25, யாக்.5:17)
- கர்த்தர் காகங்களைக் கொண்டு போஷித்தார் (1இரா.17:6)
- இயேசு மறுரூபமானபோது எலியா அவரோடு கூட காணப்பட்டார் (மத்.13:3)
- எலியா பாகால் தீர்க்கதரிசிகளுக்கு முன் "கர்த்தரே தெய்வம் என்பதை நிரூபித்தார் (1இரா.18:19-39)



சிறுவர் பகுதி

# பரிகாசம் – Mock

-K.Mohan

வேத பகுதி: 2இராஜாக்கள் 2:23–25



கர்த்தருக்குள் பிரியமான பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இன்று நாம் பரிகாசத்தைக் குறித்துப் பார்ப்போம்.

மற்றவர்களை பரிகாசம் செய்வது கர்த்தருக்கு கொஞ்சமும் பிடிக்காது. அப்படியிருக்கும்போது மற்றவர்களை பரிகாசம் செய்யலாமா? கூடாது இல்லையா. எலிசா ஒருமுறை பெத்தேலுக்குப் போனாரு. வழியில் நடந்துபோகையில் பிள்ளைகள் பட்டணத்திலிருந்து வந்து, எலிசாவைப்பார்த்து என்னசொன்னாங்கனு தெரியுமா? மொட்டைத்தலையா ஏறிப்போ, மொட்டத்தலையா ஏறிப்போ என்று சொல்லி நிந்தித்தாங்க. எதற்கு மொட்டத்தலையா ஏறிப்போ மொட்டத்தலையா ஏறிப்போ என்று சொன்னாங்கனா எலிசாவுக்கு முன்பாக இருந்த தீர்க்கதரிசி எலியா அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஆகையால் இந்த பிள்ளைகள் எலிசாவையும் பார்த்து இப்படியாக சொல்லி கேலி செய்தாங்க. இப்படி செய்தா யாருக்குதான் கோபம் வராம இருக்கும்.

உடனே எலிசா என்ன செய்தாரு தெரியுமா? அவர் திரும்பி அந்தப்பிள்ளைகளைப் பார்த்து சபித்தார்; உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் வந்து அங்கே கூடியிருந்த பிள்ளைகளை பிறீப்போட்டது. ஏன் அப்படி கேலி செய்யனும் கேலி செய்ததாலே தானே அந்தப் பிள்ளைகளை கரடி வந்து பீறிப்போட்டது. கேலி செய்யாம இருந்திருந்தால் எலிசா தாத்தா நல்ல கதைகளை சொல்லியிருப்பாரு, இல்லைனா ஒரு அற்புதம் செய்திருப்பாரு. பெத்தேலுக்கு வருவதற்கு முன்புதான் ஒரு அற்புதம் செய்தாரு அது என்ன வென்று தெரியுமா? சொல்ரே கவனமா கேளுங்க. பட்டணம் குடியிருப்பதற்கு நல்லதா இருந்தது ஆனா அங்கே இருந்த தண்ணீர் கெட்டது, நிலமும் பாழ்நிலமாயிருந்தது. அப்பொழுது எலிசா ஒரு புதுத்தோண்டியை எடுத்து அதிலே உப்புப் போட்டுக் கொண்டுவாருங்கள் என்று சொன்னார் அந்தப்படியாக கொண்டுவந்தார்கள். எலிசா அந்த நீரூற்றண்டைக்குப்போய், உப்பை அதிலே போட்டு இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லி அதை சரிசெய்தார். எப்படிப்பட்ட அற்புதம் பார்த்தீர்களா? தேவனுடைய அற்புதங்களை அறியாத இந்தப்பிள்ளைகள் எலிசாவைக் பரிகாசம் செய்ததால் 42 பிள்ளைகளை கரடி பிறீப்போட்டது. நாமும் தேவனுடைய மக்களை பரிகாசம் செய்யாமல், அவர்களுடைய ஆசீர்வாதமான வார்த்தைக்கு காத்திருப்போம்.

**மனப்பாட வசனம்:**
" பரியாசக்காரன் ஞானத்தைத் தேடியும் கண்டுபிடியான்;
புத்தியுள்ளவனுக்கோ அறிவு லேசாய் வரும்"- நீதிமொழிகள் 14:6



திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 14 ஜூலை-2014 கனி - 8

ஆசிரியருரை

## பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன்
## Fear Not For I Am With You




இந்த வார்த்தை நம்மை தேற்றுகிறது அல்லவா! ஆம், தேவனாகிய கர்த்தர் நம்மோடிருக்கிறார். நமக்கு இந்த உலகத்தில் சில பாடுகள் பிரச்சனைகள் வந்தவுடன் பயந்துபோகின்றோம். ஐயோ, நம்மை எல்லோரும் கைவிட்டு விட்டார்களே என்று சொல்லி கலங்குகிறோம். அன்பானவர்களே, நம்மை நேசிக்கும் கர்த்தர் நான் உன்னோடே இருக்கிறேன் என்று சொல்லுகிறார். இஸ்ரவேலரைப் பார்த்துச்சொல்லும்போது, "யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது" என்கிறார் (ஏசா.43:1,2). கர்த்தரையே தன் நம்பிக்கையாக கொண்டிருப்பவர்களுக்கு அவர் என்றும் உதவ வல்லவராயிருக்கிறார். அப்போஸ்தலர்கள் காலத்தில் பல பாடுகள் பிரச்சனைகள் வந்தது. அவர்கள் கர்த்தரையே தன் நம்பிக்கையாக கொண்டிருந்தபடியால் எல்லா உபத்திரவங்களிலும் அவர்களை விடுவித்தார்.

பவுல் தனக்கு வந்த சில பாடுகளைக் குறித்து கொரிந்து சபையாருக்கு எழுதிய புஸ்தகத்தில் படிக்கிறோம். "ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார். இப்பொழுதும் தப்புவிக்கிறார். இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" என்று எழுதுகிறார் (2கொரி.1:8-10). பவுலுடைய சுவிசேஷபயணத்தின்போது பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத் தக்கதாக பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் உண்டானது. பவுலுடைய மூன்று சுவிசேஷபயணத்தின்போது அவர் அதிகமாக கப்பல் பயணம் செய்தார். தண்ணீரைக்

கடந்து சுவிசேஷம் சொல்லவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கர்த்தர் அவர்களை கைவிடவில்லை. அவர்களை தப்புவித்தார் இன்னும் தப்புவிப்பார் என நம்பிகையோடிருக்கிறோம் என்பதாக எழுதுகிறார். மனிதனுக்கு ஏற்படக்கூடிய சில பாடுகளை எண்ணி நாம் கலங்கிவிடாதிருக்கவேண்டும். "நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?" (உபா.4:7). நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைப்பதற்கும் அதிகமாக நன்மை செய்கிற தேவன் நம்முடைய தேவன். அவரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம் அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறார். ஆண்டவர் இயேசு, இதோ வாசல் படியிலே நின்று கதவை தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு கதவைத் திறந்தால் அவனோடு போஜனம் பண்ணுவேன் என்கிறார். தேவனை இவ்வளவு சமீபமாக பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி உலகத்தில் இல்லை. அன்பானவர்களே, கலங்காதிருங்கள் கர்த்தர் உங்களை எல்லா இக்கட்டுக்கும் விலக்கி இரட்சிப்பார். ஒரு முறை தம்முடைய சீஷர்களைப் பார்த்து ஆண்டவர் இயேசு அக்கறைக்குப்போங்கள் என்றார். அவர்கள் படவில் ஏறி அக்கறைக்குப்போனார்கள். அப்பொழுது படவு நடுக்கடலிலே சேர்ந்து எதிர்க்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது. இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார். "பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான். அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில் ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்" (மத்.14:28-31). இயேசுவைப்போல கடலின்மேல் நடக்க பேதுருவுக்கு ஆசை. அவனுடைய ஆசையை நிறைவேற்ற கர்த்தர் நடந்து வா என்றார். அவனோ இயேசுவைப்போல கடலில் நடந்தான். ஆனால் நடந்தது என்ன? காற்று பலமாய் இருக்கிறதைக் கண்டு பயந்து கடலில் அமிழ்ந்துபோகையில் ஆண்டவரே என்னை ரட்சியும் என்றான். கர்த்தர் அழைத்தார் அவனோடே இருக்கிறார். இருந்தபோதும் அவனுக்குள் பய உணர்வு இருக்கத்தான் செய்தது. ஆம், அன்பானவர்களே அதைப்போல பய உணர்வு நமக்குள்ளும் இருக்கிறது. சில வேளைகளில் நாமும் அவிசுவாசத்தினால் வாழ்க்கையில் வரக்கூடிய சில பிரச்சனைகளில் அமிழ்ந்துபோகையில் கர்த்தரை நோக்கி கூப்பிடுகிறோம். பேதுருவை ரட்சித்த கர்த்தர் நம்மையும் இரட்சிப்பார். அவர் தண்ணீரைக் கடக்கும்போதும் நம்மோடிருந்து நம்மை இரட்சிக்கும் கர்த்தர்.

**இரண்டாவது, ஏசாயா புத்தகத்திலே நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை என்கிறார்.** ஆம் பவுலுடைய வாழ்க்கையில் சுவிசேஷப்பயணத்தின்போது எவ்வளவோ பாடுகள். அவர் சொல்லும்போது; "அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும் கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும். பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்" என்கிறார் (2கொரி.11:26,27). இவையெல்லாவற்றிலும் அவரோடிருந்த கர்த்தர் அவரை எல்லா இக்கட்டுக்கும் விலக்கி



இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை (அப்.4:12).

3. வெட்கப்படவில்லை ஏனென்றால் பவுல் கர்த்தர் மீது முழு நம்பிக்கை வைத்திருந்தார். தன்னுடைய வாழ்க்கையை ஒரு பொய்யானதற்காக தியாகம் செய்து விட்டோமென்று அவர் கவலைப்படவில்லை. பவுல் தன்னை ஒரு பிரசங்கி, ஒரு அப்போஸ்தலன் மற்றும் புறஜாதியாருக்கு போதகன் என்கிறார். இதற்காக நான் பாடநுபவிக்கிறேன். ஆகிலும் வெட்கப்படுவதில்லை. ஏனெனில் நான் விசுவாசிக்கிறவர் இன்னாரென்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புவித்ததை அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவரென்று நிச்சயித்துமிருக்கிறேன் (2தீமோ.1:1-12).

3. தேவனுடைய வல்லமை இன்னதென்று அவருக்குத் தெரியும் - இரட்சிக்க வல்லமையுள்ளவர் தேவனுடைய அன்பு மற்றும் கரிசனை இரட்சிக்க ஆவலுள்ளதென்று அவருக்குத் தெரியும். ஆகவே அவருடைய ஆத்துமாவை அவர் காத்துக்கொள்வார் என்பது பவுலுக்குத் தெரியும்.

**முடிவுரை:**

பவுல் சொல்லுகிற "நானே" என்ற வார்த்தை மிகவும் தைரியமானது. ஏனென்றால் அவைகளெல்லாம் தேவனோடு இணைக்கப்பட்டவைகள் ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன். அவர் உனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய் பிரயாசப்பட்டேன் ஆகிலும் நானல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது (1கொரி.15:10).

2. கிறிஸ்துவுடன் இருந்தால் மட்டுமே நாம் தைரியமாயிருக்க முடியும். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலி.4:13).

3. பவுலோடு கூடி நாமும் முன்னமே நான் (கிறிஸ்துவுக்கு) கடனாளி, நான் வெட்கப்படேன் என்போம்.


4. இந்த வகையில் நாம் அவரைப் பின்பற்றுகிறவர்களாயிருப்போம். ஆகவே நீங்கள் என்னைப் போலாகுங்கள் என்று சொல்கிறேன் (1கொ.4:16).

**ஆசிரியர் கடிதம்**


**வாசகர்களுக்கு,**

இயேசுவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.
இந்த மாத இதழை 5000 பிரதிகளாக அச்சிட உள்ளோம்.
சத்தியம் நம்தேசத்திலே அநேகருக்கு சொல்லவேண்டியுள்ளது.
ஆகையால் சத்தியத்தை அறியாதவர்களுக்கு இவ்விதழை கொடுத்து உதவிடுங்கள். ஒன்றுக்கு மேற்பட்ட இதழ் உங்களுக்கு வந்தால் ஒன்றைத் திருப்பி அனுப்பிவிடுங்கள். நாங்கள் அதை மற்றவர்களுக்கு கொடுக்க உதவியாயிருக்கும். நீங்கள் ஒவ்வொருமுறையும் கடிதத்தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய முகவரியுடன் Ref.No-யையும் தெரியப்படுத்துங்கள். நன்றி.

**ஜெபியுங்கள்**



- இவ்வருடத்திலே ஆறு மாத காலமாக நம்மை காத்த தேவனுக்கு ஸ்தோத்திரம் சொல்லி...
- சென்ற மாதம் வெளியிடப்பட்டுள்ள சிடி, டிவிடி ஊழியத்திற்காக...
- மேலும் ஒரு இணை ஆசிரியரை இவ்விதழ் இணைத்துள்ளது அவருக்காக...
- வேதாகம பள்ளி மாணவர்களுக்காக...
- சென்ற மாதம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட எட்டு ஆத்துமாக்களுக்காகவும், கம்பம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தேனிமாவட்ட ஊழியத்திற்காக...
- இம்மாதம் திருச்சியில் நடைபெறவுள்ள ஊழியர் கூட்டத்திற்காக...
- மழைக்காக...




# பாடம் -7 நான் தானே என்று பவுல் சொல்வது

*- Jerry Bates*

**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

3."நான் வெட்கப்படேன்"

A. வெட்கம் என்பது ஒரு பொறுப்பை நிறைவேற்றுவதை தடை செய்யக்கூடிய பயத்தை உண்டாக்கும் உணர்வைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது.

B. ரோம சாம்ராஜ்யத்தில் கிறிஸ்தவ மார்க்கம் சட்ட விரோதமானதாகக் கருதப்பட்டது.

1. யூதர்களுக்கு பவுல் ஒரு துரோகி. அவர் பிரமாணத்தைக் கவிழ்த்துப் போட்டவன். பிற மதத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்தை தேவ நம்பிக்கையில்லாத ஒன்று என முத்திரையிட்டிருந்தனர்.

2. சுவிசேஷத்தை யூதர்கள் ஒரு தடைக்கல் என்கின்றனர். கிரேக்கர்கள் மதியீனம் என்கின்றனர்.

3. எங்கும் சுவிசேஷம் எதிர்க்கப்படுகிற அளவுக்கு அது வெறுக்கப்பட்டது.

C. நீரோவின் ஆட்சியின்போது கூட ரோமில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க பவுல் வெட்கப்படவில்லை.

1. ரோமாபுரியிலே மிகப்பெரிய மத சம்பந்தமான சோதனைகளை சந்திக்க நேர்ந்தது. எண்ணற்ற புறமதங்கள் அங்கேயிருந்தன.

2. ரோமாபுரியிலே சுவிசேஷம் மிகப்பெரிய அரசியல் சோதனைகளை சந்தித்தது ரோம அரசாங்கத்தினுடைய பலமான அதிகாரமே அது.

2. ரோமாபுரியிலே சுவிசேஷம் ஒழுக்க நெறிகளுக்கு எதிரான சோதனைகளை சந்தித்தது. ஒழுக்கக் கேடுகளெல்லாம் ஒருங்கிணைத்து செயல்பட்ட நிலை.

D. பவுல் ஏன் வெட்கப்படவில்லை (எபி.4:13)

1. அது தேவ பெலனாயிருந்தது. உலகம் நினைக்கிறபடி அது மதியீனமோ பலவீனமானதோ அல்ல. ஆம் இன்று உலகில் பலர் வேதத்தை பலவீனமானதாயும் மதியீனமானதாயும் நினைக்கின்றனர்.

2. ஒருமுறை தொலைக்காட்சி நிலைய அதிகாரி நடத்தும் நிகழ்ச்சிகளில் ஒன்றில் ஆட்சேபமான பகுதியென்று ஒரு எதிர்ப்பைத் தெரிவித்தார். அதற்கு பதிலைப் பெற்றுக்கொண்டார். அவர் அதில் ஒரு பகுதி "உனக்கு நீயே சுயமாய் சிந்திக்க முயற்சித்தது, பாதிப்புக்குள்ளாக்கும் கதைகளைச் சொல்லி உங்களை நிலைபடுத்துவதை நிறுத்தவும்".

நன்னடத்தைப் புரட்சி அடையப்பட்டது.

அதன் வல்லமை செயல்முறையாக நிரூபிக்கப்பட்டது.

1. எருசலேமில் பெந்தேகோஸ்தே நாளில் கொலைகாரர்கள் கிறிஸ்துவை ஏற்று மனம் திருந்தினார்கள்.

2. விக்கிரகாராதனைக்காரர்கள், விபசாரக்காரர்கள், ஓரினச்சேர்க்கையாளர்கள் மனமாற்றப்பட்டனர் (1கொரி.1:6,9).

3. சமாரியாவிலே பில்லி சூனியத்தால் வஞ்சிக்கப்பட்டவர்கள். பில்லிசூனியக்காரர்கள், மனமாற்றப்பட்டார்கள் (அப்.8).

கல்வி, அரசியல், அதே புத்திசாலித்தனம் மற்றும் பாரம்பரிய பண்புகள் போன்றவற்றால் இந்த வல்லமைக்கு சவாலாயிருக்க முடியாது. அவர் வெட்கப்படவில்லை ஏனென்றால்; சுவிசேஷத்தின் இரட்சிப்பு என்பதை அறிந்திருந்தனர்.

குற்றமனச் சாட்சியினின்றும், கண்டனம் பண்ணப்படுவதினின்றும் விடுதலை மனிதனை மீண்டும் தேவனிடம் சேர்ப்பது.

ரோமர் 1:17 இது இரட்சிப்பிற்கான ஒரே தேவனுடைய வழி.

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம்



காத்தார். ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் பவுலின்மேல் புரளவில்லை. எல்லா இடங்களிலும் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். பவுலின் நிமித்தமாக அநேகர் காப்பாற்றப்பட்டார்கள். எலியாவுக்கு பின்பு வந்த எலிசாவின் ஊழியத்தில் அவன் யோர்தானைக் கடக்கும்போது; "அவன் எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையை எடுத்துத் திரும்பிப்போய், யோர்தானின் கரையிலே நின்று, எலியாவின் மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து; எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான்; தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாய்ப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்" (2இரா.2:13,14). எலியாவின் தேவன் எலிசாவோடு அந்த நேரத்தில் தானே அங்கே இருந்தார். அதினாலே அவன் யோர்தானை கடந்து சென்றான். மேலும் நாம் வாசிக்கிறோம். மோசேக்கு பின்பாக இஸ்ரவேலரை யோசுவா என்ற தேவ மனிதன் வழிநடத்தினான். யோர்தானின் நதியை இஸ்ரவேலர் கடக்கவேண்டும் அப்பொழுது அறுப்புக்காலம், ஆகையால் தண்ணீர் கரைபுரண்டு ஓடும். ஆனால் யோசுவாவோ ஜனங்களை நோக்கி: கர்த்தரின் உடன்படிக்கை பெட்டியை சுமக்கிற ஆசரியர்களின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரிலே பட்டமாத்திரத்தில், மேலேயிருந்து ஓடிவருகிற யோர்தானின் தண்ணீர் ஓடாமல் ஒரு குவியலாக நிற்கும் என்றான். அந்தப்படியாக, "மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று சார்தானுக்கடுத்த ஆதாம் ஊர்வரைக்கும் ஒரு குவியலாகக் குவிந்தது உப்புக்கடல் என்னும் சமனான வெளியின் கடலுக்கு ஓடிவருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று; அப்பொழுது ஜனங்கள் எரிகோவுக்கு எதிரே கடந்துபோனார்கள். சகல ஜனங்களும் யோர்தானைக் கடந்து தீருமளவும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானின் நடுவிலே தண்ணீரில்லாத தரையிலே காலூன்றி நிற்கும்போது, இஸ்ரவேலரெல்லாரும் தண்ணீரற்ற உலர்ந்த தரைவழியாய்க் கடந்துபோனார்கள்" (யோசு.3:16,17). லட்சக்கணக்கான இஸ்ரவேலர் உலர்ந்த தரைவழியாக யோர்தானைக் கடந்தார்கள். அப்பொழுது எத்தனை சிறு பிள்ளைகள், வயதான முதியவர்கள், ஆடு, மாடு, வண்டிகள் எத்தனை இருந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கும்போது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வளவு ஜனங்களும் யோர்தான் ஆற்றைக் கடக்கும் மட்டும் கர்த்தர் அவர்களோடே இருந்தார். ஏனெனில் அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை. ஆறுகளைப்போல உங்களுடைய வாழக்கையில் போராட்டங்கள் வந்தாலும் அவைகளிலிருந்து உங்களை கர்த்தர் காப்பார்.

**மூன்றாவதாக, நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய் என்கிறார்.** இயேசுவின் நாட்களில் ஒரு மனுஷன் இயேசுவினிடத்தில் வந்து; "ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப்படுகிறான்; அடிக்கடி தீயிலும், அடிக்கடி ஜலத்திலும் விழுகிறான்" என்றான் (மத்.17:15). காயம்பட்டால் காயத்திற்கு மருந்து போட்டு சரிசெய்து விடலாம். ஆனால் இந்த விதமாக ஒருவன் அடிக்கடி தீயிலும் அடிக்கடி ஜலத்திலும் விழுந்தால் எப்படி அவனைக் காப்பாற்ற முடியும். இயேசு அவனை சுகமாக்கினார். நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய் என்று சொன்ன கர்த்தர் அவனை அடிக்கடி தீயிலும் ஜலத்திலும் விழாதபடி காத்தார். ஆனால் ஆண்டவருடைய சீஷர்களால் இது கூடாமற்போனது என காண்கிறோம். மனிதனால் கூடாதவைகள் தேவனால் மாத்திரமே கூடும் என்பதை இதன்மூலம் அறிகிறோம். மோசே ஜனங்களை நோக்கி: "அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற தேவனுடைய சத்தத்தை நீ கேட்டதுபோல, யாதொரு ஜனமாவது கேட்டதும் உயிரோடிருந்ததும் உண்டோ" என்றார் (உபா.4:33).


ஆம் அன்பானவர்களே, நம்முடைய தேவன் அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிறதேவன். ஒருவரும் சேரக்கூடாத ஒளியிலே அவர் வாசம் பண்ணுகிறவர். அக்கினியின் நடுவிலே தூக்கிப்போடப்பட்ட மூவரை அறியாதவர்களே இருக்கமுடியாது. ராஜா நிறுத்தின சிலையை வணங்காதபடியால் சாத்ராக், மேசாக், ஆபேத்நேகோ ஆகிய மூன்று தேவ மனிதர்களையும் அக்கினி ஜுவாலையில் தூக்கிப்போட்டார்கள். நடந்தது என்ன? அவர்களை கர்த்தர் காத்தார். அந்த ராஜாவோ ஆச்சரியப்பட்டுப்போனான். "இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்ளுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான்" (தானி.3:25). அவர்கள் ஆராதித்த தேவன் அவர்களை அந்த அக்கினிக்கு விடுவித்து இரட்சித்தார். நீ அக்கினியில் நடக்கும்போதும் வேகாதிருப்பாய் என்று சொன்ன கர்த்தர் அவர்கள் வெந்துபோகாதபடி காத்தார். அவர்கள் மேல் அக்கினியின் மனம்கூட வீசவில்லை. ஆனால் அவர்களை தூக்கிக்கொண்டு சென்ற மனிதரை அக்கினி அழித்துப்போட்டது. இச்செய்தியை கேட்கிற அன்பு வாசகரே, நீ பயப்படாதே உன் தேவனாகிய கர்த்தர் நீ தண்ணீரைக் கடக்கும்போதும், ஆறுகளைக்கடக்கும்போதும், அக்கினி உன்மேல் பற்றாமல் பாதுகாப்பார். அவரில் நம்பிக்கையாயிரு.

**தேவன் நம்மை பெயர் சொல்லி அழைக்கின்றாரா?**

யாக்கோபை பெயர் சொல்லி அழைத்தார் என இச்செய்தியில் படித்தோம். நம்மெல்லோரையும் புதிய நாமத்தினால் அழைக்கிறார். அது எத்தனை ஆசீர்வாதமான காரியமாக இருக்கிறது. புது உடன்படிக்கையின்படி வாழ்கின்ற நாம் புதிய நாமத்தினால் அழைக்கப்படுகிறோம். யாக்கோபை இஸ்ரவேல் என்று அழைத்தார். நாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறோம். முதல் முதல் அந்தியோகியாவிலே கூடிவந்த ஆண்டவருடைய சீஷர்களுக்கு இவ்விதமாக பெயர் வழுங்கப்பட்டது. "அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப்.11:26). கிறிஸ்துவினுடைய சீஷர்களுக்குத் தான் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் சம்பந்தமில்லை. அநேகர் கிறிஸ்துவின் நாமம் தூஷிக்கப்படும்படியாக நடக்கிறார்கள். அவர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. சில பிரசங்கியார்கள் சிலரை பெயர் சொல்லி அழைக்கின்றனர். தங்களுக்கு அவர்களுடைய பெயரை கர்த்தர் முன்னுரைத்ததாக சொல்லுகிறார்கள். ஆண்டவர் ஒருவருக்கே மற்றவர்களை பெயர் சொல்லி அழைக்க அதிகாரம் உள்ளது. அவர் சொல்லி அழைத்த பெயரை ஒருவனாலும் மாற்றமுடியாது. அல்லது திருத்தவும் முடியாது. இன்றைக்கு நாமெல்லாரும் ஒரே நாமத்தினாலே தாகம் தீர்க்கப்படுகிறோம். ஆகையால் அந்த கிறிஸ்துவின் நாமத்தினாலே சபையாக கூடுகிறோம். கிறிஸ்தவர்கள் என்றும் அழைக்கப்படுகிறோம். நீங்கள் எவ்விதமாக அழைக்கப்பட விரும்புகிறீர்கள்? வேதாகமம் நம்மை அழைக்கும்படி நீங்கள் அழைக்கப்பட வீரும்புகிறீர்களா? அல்லது உலக மக்கள் அதற்கு முன்னும் அதற்கு பின்னும் சில வார்த்தைகளைப்போட்டு நாங்கள் இன்னதிலிருந்து வந்தவர்கள் நாங்கள் இன்ன ஜாதியிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லி அந்த அடைமொழிவார்த்தைகளைப் போடும்படியாக விரும்புகிறீர்களா? அன்பு வாசகரே தேவன் நம்மை அழைத்தபடியாக அழைக்கப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.




**கிறிஸ்துவின் வசனம்**




தொலைக்காட்சியில்
வெளிவந்த 12 தேவசெய்திகள்
அடங்கிய **DVD** மற்றும்
வானொலியில் வெளிவந்த
78 தேவசெய்திகள்
அடங்கிய **CD** ஆயத்தமாக
உள்ளது. தேவைப்படுவோர் உங்கள் மொபைல் எண் மற்றும் முழு முகவரியுடன் **ரூ.**100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

**Our Address**
The Word of Christ
P.O.Box - 5
Batlagundu -624 202
S.INDIA


Phone:04543-263278
Cell:9443558041




## பொது அறிவு சோதனை

1. சிம்ஸன் மற்றும் ஹாரிசன் என்பவர்கள் எதனைக் கண்டுபிடித்தார்கள்?
   அ) குளோரோஃபார்ம் ஆ) பலூன் இ) போசான்
2. ஜான் லௌட் என்பவர் எதனைக் கண்டுபிடித்தார்?
   அ) காஸ் இயந்திரம் ஆ) உலோகவியல் இ) பால்பாயிண்ட் பேனா
3. சூரியமண்டல செயல்முறையைக் கண்டுபிடித்தவர் யார்?
   அ) கலிலியோ ஆ) கோபர்நிகஸ் இ) பின்சென்
4. ஆகாய விமானம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு எது?
   அ) 1896ஆ) 1929 இ) 1903
5. காலரா தடுப்பு மருந்து யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
   அ) ராபர்ட் காக் ஆ) ஹாஃப்மான் இ) லிஸ்டர்

விடைகள்: 1. அ 2. இ 3. ஆ 4. இ 5. அ




# வெளிச்சம் - Light

A.Kanagaraj
Associate Editor

தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்ற வார்த்தை சொன்னவுடன் வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார். நாம் வெளிச்சத்தில் மட்டுமே நடக்கவும் ஓடவும், ஒரு பொருளை எடுத்துவரவும் முடியும். இருளில் நடக்கவோ, ஓடவோ, ஒரு காரியத்தை செய்யவோ முடியாது. அப்படியொருவர் இருளில் ஒரு வேலை செய்வாரென்றால் தேவனுக்கு பிடிக்காத வேலையை செய்வார் அது கெட்டகாரியமாக இருக்கமுடியும். அது பாவ வாழ்க்கையாக இருக்கிறது. பாவம் கர்ப்பம் தரித்து வேதனையை உண்டாக்கும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். "பாவத்தின் சம்பளம் மரணம்" எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்தவர்களானார்கள் என பரிசுத்த வேதம் சொல்கிறது (ரோம.3:23; 6:23).

பாவம் என்ற இருளை போக்க ஒளியாக இயேசு ஆண்டவர் இந்த பூமியில் பிறந்தார். சகல ஜனங்களின் பாவ இருளை விரட்டி வெளிச்சத்தில் நடக்க செய்பவர் இயேசு ஒருவர் மட்டுமே. வேறு ஒருவர் இந்த பூமியில் பிறந்ததுமில்லை இனிப்பிறக்கப்போவதுமில்லை. ஜீவ ஒளி இயேசு மட்டுமே. அவர் பெத்லகேமில் பிறந்தார். அந்த ஜீவ ஒளி பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கும் அத்தனை மக்களின் பாவங்களை மன்னித்து இரட்சிக்கிறவர். "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்" (கொலோ.1:13).

இருள் பகலில் இருக்குமா? இருக்கும். இருள் பிசாசை குறிக்கிறது. ஒளியில்லாத இடத்தில் பிசாசு இருப்பான். அவன் இருளின் அதிகாரியாயிருக்கிறான். பிசாசின் குணம் துர்குணம், பொல்லப்பு, விபசாரம், பொருளாசை, வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், களியாட்டுகள் முதலானவைகளை அநேகருடைய இருதயங்களில் விதைத்திருக்கிறான். இவர்கள் இருளின் பிடியில் இருக்கிறவர்கள். இவைகள் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் பாவத்தை பிறப்பிக்கிறது. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யம் என்று ஒன்று இருக்கிறது அதுவே அவருடைய சபை அதில் அவர் ராஜாவாகவும், அதன் தலைவராகவும் இருக்கிறார். சபை என்றால் இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம் அல்லது பரிசுத்தவான்கள், பொல்லாதவர்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள். இந்த சபையை ஸ்தாபித்தவரும் தலைவரும் இயேசுவே. மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்றார் (மத்.16:18). சபைகளைக் கட்டுவேன் என்று சொல்லாமல் சபையைக் கட்டுவேன் என்றார். அந்த சபை கிறிஸ்துவின் சபையாயிருக்கிறது.

கி.பி.முதலாம் நூற்றாண்டில் 12 சீஷர்கள் உயிரோடிருக்கும்போதே சபை ஸ்தாபிக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் ஒருமனப்பட்டு எருசலேமிலே உள்ள ஒரு மேல் வீட்டில் கூடி காத்திருந்தபோது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று பின்பு பேதுருவின் பிரசங்கத்தைக்கேட்டு மூவாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டனர். இதுவே முதல் சபை. அதுவே கிறிஸ்துவின் சபை.



# அக்கிரமம் மற்றும் பாவம் - Iniquities and Sin

S.I.Reagan
Associate Editor



கிறிஸ்துவுக்குள் பிரியமான மற்றும் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கும் தி வோர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழ் வாசகர் அனைவருக்கும் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் கிறிஸ்துவின் வசனத்தின்படியும், உபதேசத்தின்படியும் வாழவுமே இந்த மாத இதழ் நம்மை வழிநடத்தவும், சிந்திக்கவைக்கவும் செய்கிறது. இதற்கு நாம் அனைவரும் தேவனுக்கு நன்றி செலுத்தவேண்டும்.


பிரியமானவர்களே, இந்த தலைப்பு நமக்கு தெரிந்தவையே ஆனாலும் இன்று நாம் செய்யும் அக்கிரமம் என்ன? 1. தேவனுடைய சித்தங்களை அறியாததும் அவருடைய வசனத்தின்படி செய்யபடாததுமே. கிறிஸ்து என் சபையை கட்டுவேன் என்று மத்.16:18-ல் சொல்லியிருக்கிறார். மேலும் அந்த சபையை தன் சுய இரத்தத்தினாலே வாங்கினார் அப்.20:28. கிறிஸ்துவே அதன் தலைவராயிருக்கிறார் எபே.5:21. இவை எல்லாவற்றையும் அறிந்த நாம் மனிதனால் உண்டாக்கப்பட்டு மற்றும் பெயரளவில் உள்ள சபைகளில் இருந்துகொண்டு தேவனை வீணாக ஆராதனை செய்தால் நாம் வீணானவர்கள்தான். கிறிஸ்துவினால் சம்பாதிக்கப்பட்ட சபைக்கு உலகப்பிரகாரமான பெயர்களை வைத்திருக்கிறார்கள் இது தேவனுடைய பார்வையில் பெரிய அக்கிரமமாக இருக்கிறது. கிறிஸ்துவை ஏமாற்றி மனிதனின் ஆலோசனையின்படி நடந்தால் நரகம் நிச்சயம். ஏசாயா 59:2-ல் "நம் அக்கிரமம் தேவனுக்கும் நமக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது". கிறிஸ்துவைப்பின் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிறவர்களே சிந்தித்துப்பாருங்கள். நீங்கள் போகும் சபை யாருடையது? யாருடைய பெயரைத்தரித்திருக்கிறது? அங்கே யாருடைய உபதேசம் போதிக்கப்படுகிறது? என்று ஆராய்ந்து பாருங்கள். உங்களுடைய அக்கிரமத்திற்கு ஒரு முடிவை ஏற்படுத்துங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை நிச்சயமாக ஆசீர்வதிப்பார்.

2. பிரியமானவர்களே, நாம் செய்யும் பாவம் என்ன? கிறிஸ்து நமக்காக மரித்ததை நினைவு கூறும்படி கர்த்தருடைய பந்தியை அனுசரிக்கவேண்டும். இதை ஒவ்வொரு வாரமும் முதல் நாள் கைக்கொள்ளவேண்டுமென போதிக்கப்படுகிறோம். பழைய ஏற்பாட்டு காலத்தில் நியாயப்பிரமாணத்தை மீறுவது பாவம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் நமக்கு தெள்ளத்தெளிவாக சொல்லப்பட்ட வசனம் மற்றும் கட்டளைகளை மீறுவது எவ்வளவு பெரிய பாவம் அப்.20:7-ன் படி அதை கைக்கொள்ளாமல் மீறி நடப்போமானால் நாமும் பிரமாணத்தை மீறுகிறவர்களாயிருப்போம். வாரத்தின் முதல்நாள்தோறும் அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய பந்தியை அநுசரித்தார்கள். ஏசாயா 59:2-ல் உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. வசனத்துக்கு விரோதமாக நாம் செய்யும் பாவத்தினிமித்தம் அவருடைய முகத்தை நோக்கிப் பார்க்க முடியாதவர்களாயிருக்கிறோம். இந்த ஒரு பாவம் மட்டுமல்ல உபதேசவிஷயத்திலும், அதை கைக்கொள்ளுகிற விஷயத்திலும், வசனத்தை மற்றவர்களுக்கு போதிக்கிறவிஷயத்திலும் மேலும் தேவனை தொழுதுகொள்ளுகிற விஷயத்திலும் பாவம் செய்கிறோம். ஆகையால் எந்த விஷயத்தில் தவறுகிறோம் என்பதை வசனத்தைக்கொண்டு சரிசெய்துகொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். அதை சரிசெய்துகொள்ள தேவன் உங்களுக்கு ஞானத்தை கொடுக்கும்படியாக ஜெபிக்கிறோம்.

# கிறிஸ்தவம் ஏன் மிகவும் வித்தியாசமுள்ளதாயிருக்கிறது

## Why Christianity Is So Different

*J.C.Choate*



கிறிஸ்தவம் உலகம் முழுவதிலும் காணப்படுகிறது. கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவர்கள் லட்சம் லட்சங்களான எண்ணிக்கையில் உள்ளனர். இதன் அங்கத்தினர்களாக இதனுடைய செய்தியை எடுத்துச் சென்று, இதனுடைய அங்கத்தினர்கள் தொடர்ந்து வளர்ந்து வருகின்றனர்.

கிறிஸ்தவம் கிறிஸ்துவில் உள்ள நம்பிக்கையின் அடிப்படையிலானது - மற்ற மனுஷரில் அல்ல, மற்ற பரிசுத்த மனுஷரில் அல்ல அல்லது மற்ற தீர்க்கதரிசியிலும்கூட அல்ல, ஆனால் உலகத்தின் பாவங்களுக்காக மரித்தவரும் என்றென்றும் வாழும்படி கல்லறையினின்று உயிர்த்தெழுந்தவருமாயிருக்கிற தேவனுடைய குமாரனாயிருக்கிறவரில் உள்ள நம்பிக்கையின் அடிப்படையிலானது. கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று பேதுருவும் அப்போஸ்தலர்களும் அறிக்கையிட்டார்கள் (மத்.16:16-18). தேவனும்கூட கிறிஸ்து தம்முடைய குமாரனென்று வானத்திலிருந்து வெளிப்படையாகத் தெரிவித்தார் (மத்.17:5).

இன்று உலகத்தில் ஒரு உயிருள்ள தலைவரைக் கொண்டிருக்கிற ஒரே சமயம் கிறிஸ்தவமே. மற்ற சமயங்களின் தலைவர்களெல்லாம் மரித்தவர்களாகவும், மீண்டும் உயிரோடே எழாதவர்களாயுமிருக்கிறார்கள். கிறிஸ்து தாம் மரித்தோரிலிருந்து திரும்பவும் வருவேன் என்று சொன்னார். அந்தபடியே உயிர்த்தெழுந்தார் (யோவா.11:25; மத்.28:1-6) அவர் தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்றாதவராயிருந்திருந்தால்; அவர் பொய்யராகவும், வஞ்சகராகவும் இருந்திருப்பார். அவர் உயிர்த்தெழாதிருந்தால், கிறிஸ்தவம் ஒருபோதும் வளர்ந்திருக்காது. ஆனால் கிறிஸ்தவம் உயிர்வாழ்கிறது. சபை உயிர்வாழ்கிறது, பொதுவான உயிர்த்தெழுதலின் நம்பிக்கை உயிர்வாழ்கிறது, கிறிஸ்து ஜீவிக்கின்றபடியால் எல்லாமே உயிர் வாழ்கின்றது.

கிறிஸ்தவம் ஒரு பிரபல்யமான சமயம். வேறு எந்த ஒரு சமயம் அல்லது நம்பிக்கையைக் காட்டிலும் கிறிஸ்தவமானது நன்மையானவற்றிக்காக உலகத்தை மாற்ற பலவற்றைச் செய்திருக்கிறது. உலகின் சர்வதேச பஞ்சாங்கம் தங்களுடைய காலங்களை கிறிஸ்துவின் ஜீவியம் மற்றும் மரணத்தின் அடிப்படையிலே நிர்ணயம் செய்துள்ளது. தேசங்களின் சட்டங்கள் பெருமளவு கிறிஸ்துவின் நீதி போதனைகளினாலே வசீகரசக்தி பெற்றுள்ளது. கிறிஸ்து வாரத்தின் முதல்நாளில் கல்லறையிலிருந்து உயிரோடே வெளிப்பட்டார் என்ற உண்மையின் அடிப்படையிலும், மேலும் கர்த்தர் தம்முடைய சீஷர்கள் தம்மை நினைவுகூரும்படி, தேவனை ஆராதிக்கும்படி வாரத்தின் முதல் நாளில் கூடிவர தம்முடைய ஜனங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார் என்பதின் அடிப்படையிலும் (மத்.28:1-6; அப்.20:7) அதிகமான நாடுகள் ஞாயிற்றுக் கிழமையை விடுமுறை நாளாக அங்கீகரிக்கிறது. இது நிச்சயமாகவே கிறிஸ்தவத்திலிருந்து வந்தது.

கிறிஸ்தவம் மனிதனுக்கென்று அறியப்பட்டுள்ள மிக மேன்மையான நீதி கொள்கைகளை ஆதரிக்கிறது. இது நேர்மை, ஒருவனுடைய கடனைத் திரும்பச்



பெண்கள் பகுதி

# நீதிமான்

## Righteous Man

- Glory Arjunan



யார் நீதிமான்? நீதிமான் ஒருவனுமில்லையே, என யோசிப்போம். உண்மை தான். ஆனால் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஞானஸ்நானத்தினால் நாம் கழுவப்பட்ட போது நம்மை நீதிக்கு அடிமைகளாக்கி, நீதிமான்களாக்கியிருக்கிறார். இவ்விதமாக இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு நீதிமான்களாக்கப்பட்டவர்கள் அநேக ஆசீர்வாதங்களையும், கீர்த்தியையும் பெற்று வாழ்கின்றனர். தேவஆசீர்வாதங்களையும் நற்கீர்த்தியையும் (நற்பெயர்) பெறும்படிக்கு நாம் செய்யவேண்டிய காரியங்கள் தான் என்ன என்பதைப் பார்ப்போம்.

- ஒருவன் நீதிமானாக மாற்றப்பட்டு நீதிக்கு (இயேசுவுக்கு 1கொரி.1:13) அடிமையாகும்போது "நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும்" (நீதி.10:6).
- நீதிமானின் சிரசிற்கு அடுத்தபடியாக "நீதிமானுடைய வாய் ஜீவ ஊற்று..." (நீதி.10:11). அவ்வூற்றிலிருந்து கசப்பான நீர் புறப்படாது.
- அடுத்தது "நீதிமானுடைய நாவு சுத்தவெள்ளி" (நீதி.10:20) இவனுடைய சொற்கள் மிகுதியாயிருப்பதுமில்லை பாவம் செய்வதுமில்லை (வச. 19).
- "நீதிமானுடைய உதடுகள் பிரியமானவைகளைப் பேச அறியும்" (நீதி.10:32). கிருபையுள்ள வார்த்தைகளே அவன் உதடுகளிலிருந்து பிறக்கும். அதுமாத்திரமல்ல "நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும்" (வச.21).
- நீதிமான்களுடைய வேரோ அசையாது" (நீதி.12:3).
- நீதிமானுடைய வேர் கனிகொடுக்கும் (வச.12)

நீதிமானுடைய வழிகள் இவ்விதமாக செம்மைப்படும்போழுது; "நீதியின் பாதையில் ஜீவன் உண்டு" (வசனம் 28). ஏனென்றால் அவன்; பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு; தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்தமாகுதல் அவர்களுக்குக் கிடைக்கும் பலன். முடிவோ நித்திய ஜீவன் (ரோம.6:22).

அன்பு சகோதரிகளே நம்பாதைகள் நெய்யாய் பொழிய வேண்டுமானால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நீதிக்குரிய காரியங்களை உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை செய்வோம். அப்பொழுது நீதிமான்களாய் மாறுவோம். "நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும்" (நீதி.10:24). இதுவரை நாம் விரும்புகிற காரியத்தைப் பெற்றுக்கொள்ளாமலிருப்போமானால் வேதத்தின் வெளிச்சத்தில் நம்மை நாமே உய்த்து ஆராய்வோம். குறைகளை களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ள முயற்சிப்போம். தேவன் தாமே நமக்கு உதவுவாராக! ஆமென்.

தெரிந்துகொள்ளுங்கள்... **வேதாகமம்**

**வேதாகமம் என்ற வார்த்தையில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன? ஐந்து. அந்த ஐந்து எழுத்துக்களும் யாரைக்குறிக்கின்றன? கிறிஸ்துவை.**

1. **வே** நான் தாவீதின் **வே**ரும், சந்ததியும்... (வெளி.22:16)
2. **தா** இதோ, நான் தெரிந்துகொண்ட **தா**சன்... (மத்.12:18)
3. **க** இன்று **க**ர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர்... (லூக்.2:11)
4. **ம** அன்றியும் **ம**னுஷகுமாரன் சர்வவல்லவருடைய... (மத்.26:64)
5. **ம்** **(இ)ம்** மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிரு... (மத்.1:23)




**இந்த ஐந்து எழுத்துக்களும் முழுக்க முழுக்க கிறிஸ்துவை குறிப்பிடுவதாலே தான் இந்த புத்தகம் (வேதாகமம்) புத்தகங்களுக்கெல்லாம் சிறந்த புத்தகம் என்னப்படுகிறது.**

**S.V.Paulraj**

## மாபெரும் வைத்தியர்!
## உலக இரட்சகர் இயேசு கிறிஸ்து!!

ஒருவர் சுகமில்லாமல் வியாதியாய் படுக்கையில் படுத்திருப்பதை நாம் பார்க்க கூடுமானால் நீங்கள் சுகவீனமாய் படுத்திருப்பதை கண்டு நான் மனம் வருந்துகிறேன். என் உளம்கனிந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன் என்று சொல்லுவோம். அத்துடன் நீங்கள் விரைவில் பூரண சுகம்பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன் என்றும் சொல்லுவோம். நம் அனைவருக்கும் நிழலின் அருமை வெயிலில் சென்றால்தான் தெரியும் என்பதுபோல் சுகவீனம் ஏற்படும் வரை நாம் சுகமாய் வாழ்ந்த காலங்களையெல்லாம் மறந்துவிடுவோம். நாம் அதனை உணருவதோ சிந்திப்பதோ கிடையாது. அற்புத சுகமளித்த தேவனை மறந்து விடுகிறோம். அவர்தான் உலகத்தின் மாபெரும் வைத்தியர். அவர்தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. உலகத்தின் மெய்யான வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்.

நாம் சுகவீனம் அடைகின்றபோது நல்ல மருத்துவரை சென்று வைத்தியம் செய்து கொண்டு சீக்கிரம் குணம்அடைய வேண்டுமென விரும்புகிறோம். இது நியாயமானதே. அதில் தவறில்லை. ஆனால் ஒன்றை மட்டும் மறந்து விடுகிறோம். பூரண சுகம் தரக்கூடிய எல்லாம் வல்லவரான பரம வைத்தியராகிய இயேசுகிறிஸ்துவிடம் சென்று நமது விருப்பத்தை ஜெபத்தின் மூலம் பிதாவைநோக்கி அவரிடம் சொல்லி பூரண சுகத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மறந்துவிடுகிறோம். நமது வியாதியை மட்டுமல்ல, நமது பாவத்தையும், சாபத்தையும் எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை இரட்சிக்க அவர் வல்லவராயிருக்கிறார். "ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்" (யோபு 5:9)

**M.Rajamani**



செலுத்துதல், வேலைக்குக் கூலி கொடுத்தல், ஒருவரை ஒருவர் கனம்பண்ணுதல் போன்றவற்றை போதிக்கிறது. இது நல்லொழுக்கத்தையும், குடும்ப மேன்மையையும் ஆதரிக்கிறது. மேலும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண பந்தத்தை ஆதரிக்கிறது அத்தோடு அவர்கள் ஒருவருக்கொருவர் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. இது எல்லாருக்கும் தேவன் தலைவராயிருக்கிறார், மனைவிக்கு புருஷன் தலைவராயிருக்கிறான் என்பதை அங்கிகரிக்கிறார் ஆனால் மனுஷனும் ஸ்திரீயும் தங்களுக்கென்று பொறுப்புகளைப் பெற்றிருக்கிறார்கள் மேலும் தங்களுடைய பிள்ளைகளைப் போஷித்து தேவனுக்கேற்ற புத்திமதியில் வளர்க்கும் பொறுப்புகளையும் பெற்றிருக்கிறார்கள்.

கிறிஸ்தவம் ஒரு சமயம், தேவனுக்கும் மனிதனுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அன்புப் பணி என்பதே சமயத்தின் அர்த்தமாயிருக்கும். யாக்கோபு, “திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது” என்றார். இதன் பொருள் சமூக சேவை செய்வதைக் காட்டிலும் திக்கற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் சந்திப்பதே மேன்மையானது என்பதாகும். இதன் பொருள் தேவையிலிருக்கும் ஜனங்களை விசாரிப்பதாகும். கிறிஸ்தவர்கள் தங்களால் இயன்ற அளவிற்கு மற்றவர்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு கடமையுணர்ச்சியைக் கொண்டுள்ளனர். பவுல், “ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்” (கலா.6:2) என்றார்.

எல்லாவற்றையும் சிருஷ்டித்தவராகிய தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாக கிறிஸ்தவத்தை எடுத்துச் சொல்லுகிறவர்கள், மனுஷரோடு வாசஞ்செய்யும்படிக்கும் உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையிலே மரிக்கவும் உலகத்திற்கு அனுப்பப்பட்டவராகிய கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கின்றனர். கிறிஸ்து, “ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்” (யோவா.8:24). தேவனுடைய வார்த்தையை எழுதும்படிக்கு பரிசுத்த ஆவியானவர் எண்ணிலடங்கா விஷயங்களை பல நூறு ஆண்டுகளுக்கும் மேலாகவே உணர்த்தினார் என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர், ஆனபடியினால் வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, எனவே இது தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது (2பேது.1:21; 2தீமோ.3:16,17; மத்.24:35). கிறிஸ்து தம்முடைய சபையை ஸ்தாபித்தார் என்றும், அது ஒரே ஒரு சபையென்றும், இரட்சிக்கப்படுகிறவர்கள் அதில் சேர்க்கப்படுகிறார்களென்றும் நாம் விசுவாசிக்கிறோம் (மத்.16:18; எபே.4:4-6; அப்.2:47). கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மேலும் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொண்டு அதுவே உலக முழுவதுக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டிய நற்செய்தியாயிருக்கிறது என்று விசுவாசிக்கிறோம். கிறிஸ்து, “பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்; (மாற்.16:15,16) என்றார். கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்தவர்களாக மட்டுமே மாறி, வாரத்தின் முதல் நாளில் தேவனை ஆராதித்து, அவர்கள் அனுதினமும் கிறிஸ்துவுக்காக

வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என விசுவாசிக்கிறோம் (மத்.7:21; 1பேது.4:16; யோவா.4:24; அப்.20:7; லூக்.9:23).

கிறிஸ்தவம் கிறிஸ்துவுக்குள் இருக்கிற எல்லாவிசுவாசிகளின் ஒற்றுமையை ஆதரிக்கிறது (1கொரி.1:10), மேலும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள். பவுல், ''நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்'' (கலா.3:26-28) என்று எழுதினார்.

ஒருவன் வெளிப்படையான சரீரப்பிரகாரமாக தேவனுடைய குடும்பத்தில் பிறக்கமுடியாது ஆனபடியால் கிறிஸ்தவம் சரீரப்பிரகாரமான பிறப்பின் மூலம் வளருகிறதில்லை ஆனால் ஆவிக்குரிய பிறப்பின்மூலம் வளர்கிறது (யோவா.3:3-5). வேறுவார்த்தையில், கர்த்தர் தம்முடைய சீஷர்களை தம்மைப் பற்றி ஜனங்களுக்குப் போதிக்கும்படி, அவர்களிடத்தில் விவேகத்துடன் விளக்கவும், கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் கொள்வது அவர்களுக்கு அவசியம் என அவர்களை நம்பச்செய்யவும், அவருக்குக் கீழ்ப்படியபண்ணவும் ஜனங்களை அனுப்புகிறார். அப்போது தான் கிறிஸ்து அவர்களை இரட்சித்து அவர்களை தம்முடைய பிள்ளைகளாக உருவாக்கமுடியும். பவுல் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதின் மூலம் விசுவாசம் வருகிறது என நமக்கு நினைப்பூட்டுகிறார் (ரோ.10:17), எபிரெய எழுத்தர் விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் என்கிறார் (எபி.11:6). மீண்டும், எபிரெய எழுத்தர் கிறிஸ்துவைக் குறித்தும் அவருடையவர்களாக இருப்பவர்களைக்குறித்தும், ''அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி'' (எபி.5:8,9) என்றார். அதன் பொருள் சிறு பிள்ளைகள் அல்லது குழந்தைகள் கிறிஸ்தவர்களாக அல்லது சபை அங்கத்தினர்களாக மாறமுடியாது. அவர்கள் தீமையிலிருந்து நன்மையை அறியும்படிக்கும் கிறிஸ்துவின் போதனையைக் கேட்கும்படிக்கும், அவர்கள் தாமாகவே கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக்கீழ்ப்படியவேண்டும் அல்லது வேண்டாம் எனத் தீர்மானிக்கும்படிக்கும் வளரவேண்டும்.

கிறிஸ்தவம் எல்லாரும் முடிவிலே உயிர்த்தெழுவார்களென்றும், அங்கே எல்லாருக்கும் ஒரு நியாயத்தீர்ப்பு உண்டென்றும், எல்லாரும் நித்தியத்தை பரலோகத்தில் அல்லது நரகத்தில் கழிப்பார்களென்றும் போதிக்கிறது. கிறிஸ்து, ''இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்'' (யோவா.5:28,29) என்றார். நாமும் இதை வாசிக்கிறோம்: ''ஏனென்றால், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே'' (எபி.9:27). பவுல் ''ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'' (2கொரி.5:10) என்று வெளிப்படையாகக் கூறுகிறார். நியாயத்தீர்ப்பு நடைபெற்ற பின்பு,



மனுஷர்கள் கொண்டிருந்தார்கள்? இந்தியாவில் புராதனமான வேதகால வரலாற்றின்படி "ஒரு தெய்வ வழிபாட்டு மார்க்கத்திற்கான அடையாளங்கள் (ஒரே கடவுள் மேல் நம்பிக்கை) இயற்கையை வழிபடும் கொள்கைக்கு மோதலாக இருந்தன. இயற்கையை வழிபடும் கொள்கை (இயற்கையின் காரியங்களை தேவனுக்கு சமமாக்கி அவைகளை வழிபடுதல்) படிப்படியாக வீழ்ச்சியடைந்து பல தெய்வ வழிபாட்டு கொள்கையில் மூழ்கியது (பாலித்தீயிஸம்) ஆனால் சுரூபங்களை வழிபட்டார்கள் என்று காட்ட ஒன்றும் இல்லை, ஆத்துமாக்கள் ஒரு வித்தியாசமான சரீரத்துக்குள் பிரவேசிப்பது பற்றிய எந்த குறிப்பும் காணப்படவில்லை அல்லது இனத்தை குறித்து பாக்கும்பொழுதும் பிரமாண ரூபத்தை குறித்தும் எந்த குறிப்பும் காணப்படவில்லை (சி.எச்.பக் எழுதிய இந்தியாவின் நம்பிக்கைகள், நியாயங்கள் மற்றும் பண்டிகைகள்).

**எகிப்தியர்**

எகிப்து தேசத்தில் ஆண்டுவந்த அகெநாட்டான என்ற பார்வோன் (கி.மு.1357 - 1350) ஆட்டன் என்ற ஒரு தெய்வத்தின் முன்னேற்றத்திற்காக தன்னுடைய சக்திகளை அர்ப்பணித்தான். ஆட்டன் என்பது சூரியனுடைய கதிர்களை அடையாளப்படுத்துகிறவைகளாக இருந்தன. மெய்யாகவே ஆட்டன் என்பது சூரிய கதிர்களாக இருந்தனவா அல்லது கடவுளுடைய மகத்துவத்திலிருந்து தொடங்கிய ஒளியை சித்தரிக்க சூரியகதிர்கள் பயன்படுத்தப்பட்டனவா என்ற விவாதங்களும் இருக்கின்றன. அகெநாட்டன் தம்முடைய பாடல் ஒன்றில் இவ்விதமாக எழுதினார்:

"உம்முடைய கிரியைகள் எவ்வளவு திரளானவைகள்! அவைகள் எங்களுக்கு முன்பாக மறைவாயிருக்கின்றன! ஓ முழுமையான கடவுளே, உம்முடைய வல்லமை வேறு எவருக்கும் இல்லை, நீர் மாத்திரமே இருந்தபொழுது உம்முடைய இருதயத்திற்கேற்றபடி பூமியை சிருஷ்டித்தீர்.."

சீன வரலாற்றின் காலம் கி.மு.2,500க்கு திரும்பி செல்வோமேயாகில், அங்கே பாபிலோனிய/ அசீரிய கலாச்சாரத்தின் செல்வாக்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த காலமானது சீனாவின் தொடக்க காலங்களை மனித இனம் பாபேலில் இருந்து சிதறிய காலத்திற்கு இணையாக இருக்கிறது. எதிர்பாராத செய்தியாக - எதிர்பார்ப்பில்லாத செய்தியாக - புராதன சீனகையெழுத்தை குறித்த ஒருபாடம் அநேகமான வேதாகம குறிப்புகளையும், எண்ணங்களையும் அறிவிக்கின்றது. சி.எச்.கேங்க் மற்றும் ஆர். நெல்சன் என்பவர்கள் எழுதிய ஆதியாகமம் கண்டுபிடிப்பு என்ற புத்தகத்தில் வெவ்வேறான குணாதிசயங்களையும் அவைகளுடைய அர்த்தங்களையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

வரலாற்றுரீதியாக தொடக்கத்திலேயே பாபேலில் இருந்து வெளியேறி வேற்று நாட்டில் குடியேறிய இவர்கள் ஒரே தெய்வ நம்பிக்கை உடையவர்களாயிருந்து தங்களுடைய கடவுளை பரலோக "ஷான்க்டி" என்று அழைத்தார்கள். அந்த சத்தமும் கூட எபிரெய மொழியிலுள்ள "ஷடாய்" என்ற வார்த்தைக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறது. அவர்களுடைய தேவத்துவம் மூன்று நபர்களை சுட்டிக்காட்டுகிறது. அவர்கள் எந்த விக்கிரகங்களையும் வழிபடவில்லை. அவர்களுடைய ஆதி சடங்காச்சாரங்களில் ஒன்று "கரை பலி" என்று அழைக்கப்படுகிறது (எத்தெல் ஆர்.நெல்சன் மற்றும் ரிச்சர்டு இ.பிராட்பொரி எழுதிய "ஆதியாகமம் மற்றும் கன்பூஷியஸ் இரகசியம் தீர்வு செய்ய முடியாதது என்ற நூல்)

பெண்கள் பகுதி

# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா? -Betty

## Can Man Find the Way to God?






### தேவன் சர்வ வியாபியாய் இருக்கிறார்.

நம்முடைய சரீரங்களும், பூமிக்குரிய அண்ட சராசரமும் சிருஷ்டிகர் ஒருவர் இருக்கிறார் என்பதற்கு மறுக்கமுடியாத நிருபணமாக இருக்குமேயாகில், ஒரு தேவன் சகல காரியங்களையும் நிலைநிற்கும்படி கொண்டுவந்திருக்கிறார் என்பதால் நிச்சயமாக அவருடைய உண்மைக்கான நிருபணம் இன்னும் இருக்கவேண்டும். இந்த பூமிக்கோளத்தை சுற்றிலும் இன்று நாம் மனித இனத்தை உற்று நோக்கும் பொழுது நாம் என்ன கண்டு கொள்கிறோம்? பெரும் சதவீத அளவிலான ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். தேவன் பல வித்தியாசமான பெயர்களால் அழைக்கப்படுகிறார் என்பதும், வெவ்வேறான ரூபங்களில் அடையாளப்படுத்தப்படுகிறார் என்பதும் பரவலாக வித்தியாசமான வழிகளில் ஆராதிக்கப்படுகிறார் என்பதும் மெய்தான்! இவ்விதமாக அநேக வேறுபாடுகள் இருப்பினும், தேவன் இருக்கிறார் என்பது ஒத்துக்கொள்ளப்படுகிறது.

நாம் வரலாற்று குறிப்புகளுக்கு தொல் பொருள் ஆராய்ச்சியியலுக்கு திரும்பும்பொழுது, இன்னும் காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட வரலாற்று நிருபணங்களுக்கு திரும்பும்பொழுது அந்த ஜனங்களும்கூட தேவனிடத்தில் விசுவாசமாய் இருந்தார்கள் என்ற உண்மையினால் நாம் மீண்டும் நம்முடைய மனதில் அதை பதியவைக்கிறோம்! தேவனை குறித்த உண்மையின் பலமான நம்பிக்கையுடனே வெற்றிகரமாக காலம்முழுவதும் பூமியின் ஜனக்கூட்டம் வாழ்ந்து மரித்திருக்கிறது.

### தேவனை குறித்த ஆரம்பகால மார்க்க நம்பிக்கைகள்

ஆண்ட்ரூ லெங் என்பவர், "மார்க்கத்தை உருவாக்குதல்" என்ற தம்முடைய புத்தகத்தில், உலகத்தின் ஆதிகால ஜனங்களில் அநேகர் ஒரே ஒரு உயர்வான தேவனை தொழுதார்கள் என்று உறுதிப்படுத்தினார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ.சி. பாக்கொயட் சொன்னார், "மிருக ஜீவன்களுக்கும், இயற்கை பொருட்களுக்கும் ஆத்துமாக்கள் உண்டு என்று நம்பும் கொள்கை பல பிசாசுகள் பற்றிய கொள்கை, பல தெய்வங்கள் உண்டென்று நம்பும் கொள்கை, தத்துவத்தில் ஒரேவிதமான கொள்கையுடையவர்கள், ஏராளமான கொள்கையுடையவர்கள், உலகப் பொருட்களில் பற்றுடையவர்கள், இவ்வாறாக இப்பட்டியலில் நீண்டு கொண்டே செல்லும் உண்மையான சுத்தமான விசுவாசத்திலிருந்து வீழ்ந்து போனதற்கான உதாரணங்கள். இந்த விசுவாசத்தை எபிரெயர்களும், கிறிஸ்தவர்களும் மனித இனத்திற்காக மீட்டுக்கொண்டு வர வேண்டியதாயிருந்தது".

மனிதர்கள் தோன்றிய ஆரம்ப நாட்களில் எந்தவிதமான மார்க்க நம்பிக்கைகளை



துன்மார்க்கர் நித்திய ஆக்கினைக்குள்ளாக அனுப்பப்படுவார்கள் ஆனால் நீதிமான்களோ நித்திய ஜீவனைப் பெறுவார்கள் (மத்.25:46).

கிறிஸ்தவம் எதிர்க்கிற காரியங்களும் உண்டு. இது சாத்தானையும், உலகத்தையும் அதின் மாம்சக்கிரியைகளையும் எதிர்க்கிறது (1யோவா.2:15-17: கலா.5:19-21). மிகவும் குறிப்பாக, இது போர், லஞ்சம், புகைப்பிடித்தல், சூதாட்டம், மதுஅருந்துதல், போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், கருக்கலைப்பு, சுயபுணர்ச்சி, இது போன்ற பலவற்றிற்கும் எதிர்த்து நிற்கிறது. இது ஜாதிமுறைமையையும், விக்கிரகாராதனையையும், எல்லா தவறான சமயங்களையும், மனுஷருக்கு முன்பாக தங்களை கடவுள்கள் என்று காண்பிக்கிறவர்களையும் புறக்கணிக்கிறது. இது மறு அவதாரத்திலும் இந்த ஜனங்கள் மாம்சம் புசிக்கிறதை தவிர்ப்பதிலும் நம்பிக்கைகொள்கிறதில்லை. பவுல் சிலர் விவாகம் பண்ணாதிருக்கவும் மாம்சம் புசியாதிருக்கவும் கட்டளையிடுகிறார்கள் “தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல” (1தீமோ.4:3-5) என்றார்.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாங்கள் தேவனுடைய வார்த்தையில் இடம்பெறாத எல்லா கிறிஸ்தவ அமைப்புகளையும் எதிர்க்கிறோம். வேறு வார்த்தையில், அதிகமாய் உலகத்திற்கு ஒத்த தோற்றமுடைய கிறிஸ்தவம் தவறான கிறிஸ்தவமாயிருக்கிறது. இது உண்மையாயிருப்பதினால் கிறிஸ்தவம் கெட்ட பேரை சம்பாதிக்கிறது. கிறிஸ்தவர்கள் சண்டையிடுகிறதை, கிறிஸ்தவர்கள் இதைச் செய்கின்றனர், அதைச் செய்கின்றனர், எதுவெல்லாம் தீமையானதும், தவறானதுமாக இருக்கிறதோ அதையெல்லாம் செய்கின்றனர் எனக் கேள்விப்படுகிறோம். மேலும் இது உண்மை கிறிஸ்தவத்தை வெளிப்படுத்துகிறதில்லை. வேதாகம கிறிஸ்தவமும், அதை வழக்கப்படுத்திக் கொள்ளுகிறவர்களும் நன்மைக்கென்றே அறிப்பட்டவர்கள், அதை அவர்கள் செய்து இவ்வாறாக தாங்கள் வாழும் உலகத்தை சிறப்பானதாக உருவாக்குகின்றனர். ஆனபடியால், தேவனுடைய வார்த்தை மனிதனால் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவத்திற்கும் பிரிவினை சபைகளுக்கும், அமைப்புகளுக்கும் எதிராகபோதிக்கிறது.

உலக சமயங்களை அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என உரிமைபாராட்டுகிற மனுஷ பிரிவினைகளை நாம் நம்புகிறதில்லை, ஆனால் நாங்கள் சமய சுயாதீனத்தில் விசுவாசம் கொள்கிறோம். தேவன் தாமே உலகத்தின் தவறான மார்க்கங்களை அங்கிகரிக்கிறதில்லை, ஆனால் அவர் ஒவ்வொரு மனுஷனையும் அவன் தம்மை சேவிக்க அல்லது தம்மை புறக்கணிக்க அவனுடைய தீர்மானத்திற்கு விட்டுவிடுகிறார். ஒரு மனிதனும் தன்னுடைய மார்க்கத்தை மற்றவன் மேல் திணிக்க அதிகாரம் கொண்டிருக்கவில்லை. மனிதன் தான் செய்யவிரும்புகிற வண்ணமாக தன் ஆத்துமாவில் செய்ய சுதந்திரம் பெறுகிறவரை அவன் உண்மையாக சுதந்திரமாக இல்லை (யோவா.8:32) மனிதனுக்கு தேவனை அறிமுகப்படுத்துகிறதும் அவன் தன் பாவங்களிலிருந்து எவ்வாறு விடுதலை அடைய முடியுமென்கிறதுமான தேவனுடைய வார்த்தையின் மூலம் மெய்யான சுதந்திரம் வருகிறது.

நீ எந்த மார்க்கத்தை பின்பற்றுகிறாய்? ஏன் அதைப் பின்பற்றுகிறாய்? அந்த மார்க்கத்தில் மாம்சத்தில் பிறந்தாயா? அல்லது போதனையின் விளைவாக அதை ஏற்றுக்கொண்டு இது ஒரே மெய்யான வழியைக் காட்டுகிறது என்ற விசுவாசத்திற்குள் வந்திருக்கிறாயா?

உன்னுடைய சமயம் ஞானத்தை உருவாக்குகிறதா? இது இன்றைய நவீன

உலகத்தைப்போல் இருக்கிறதா அல்லது இது நீ ஜீவிக்கும்படி கடந்த காலத்திற்கே உன்னை கொண்டு செல்கிறதா? உனக்கு அறிவை உணர்த்தும் அவசியமான காரியங்களைக் கொண்டிருக்கிறதா அல்லது இது பொருத்தமில்லாத உன்னை முட்டாளாக்கக் கூடிய காரியங்களைச் செய்யும்படி வழிநடத்துகிறதா?

ஜனங்கள் ஒரு குறிப்பிட்ட நிலை இருந்தால் மட்டுமே வாசிப்பதற்கும், படிப்பதற்கும் தங்களுடைய சுய தீர்மானங்களை உருவாக்குவதற்கும் தருணங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்று பயப்படுவதற்கு கிறிஸ்தவத்தில் ஒன்றுமில்லை. கிறிஸ்தவம் பொருத்தமுள்ளது அறிவுப் பூர்வமானதென்று நாங்கள் நம்புகிறோம். இதற்கும் மேலாக, கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களையும் கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களையும் பாருங்கள், எந்த சமயம் அவர்களுக்காக கிரியை நடப்பிக்கிறது என்றும் கவனியுங்கள். நீங்கள் இதை பயிற்சிக்கும்போது, அதிகமான மாற்றங்கள் மூலம் இதன் ஜனங்கள் நன்மைக்காகவும், இது இவர்களை சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரியபிரகாரமாகவும் நல்வாழ்விற்கு வழிநடத்துகிறது நிச்சயமாக கிறிஸ்தவம் என்றும் காண இயலும். இந்த ஜனங்கள் அவர்கள் வாழ்விற்கென்று அதிகமாகப் பெற்றிருப்பதாலும், வருங்காலத்திற்கென்றும் எல்லாவற்றையும் பெற்றிருப்பதாலும் மற்றவர்களைக் காட்டிலும் சந்தோஷமிக்கவர்களாக இருக்கின்றனர்.

நீ கிறிஸ்துவில் விசுவாசியாக இல்லாவிட்டால், கிறிஸ்தவத்தைக் குறித்து ஆராய்ந்து பார்க்கும்படி உன்னை உற்சாகப்படுத்துகிறேன். வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டுப் பகுதியில் இது குறித்து வாசி. நீ அப்படி வாசிப்பாயென்றால், நீ ஒரு கிறிஸ்தவனாக மாற விரும்புவாய் என்று நான் நம்புகிறேன். இதற்கும் மேலாக, நீ தேவனிடத்திலும் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் கொள்வதின் மூலமும், உன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்புவதின் மூலமும், கிறிஸ்துவை உன் வாயினாலே அவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடுவதின் மூலமும், உன் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதின் மூலமும் நீ கிறிஸ்தவனாக மாறமுடியும் (எபி.11:6; யோவா.14:1-3; அப்.17:30; ரோம.10:10; அப்.2:38). நீ இதைச் செய்யும்போது, கர்த்தர் உன்னை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்ப்பார், இவ்வாறாக நீ ஒரு கிறிஸ்தவனாக மாறி கிறிஸ்தவத்தின் ஒரு அங்கமாவாய் (அப்.2:47; 1பேது.4:16). இது எளிமையானதில்லையா? இது மிகவும் எளிமையானதும் குழப்பமற்றதுமாகும். தயவு செய்து இது குறித்து தடுமாறாதே.

**வேத அறிவுப்போட்டி: 166 -ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. இயேசுகிறிஸ்து | -வெளி.1:5 |
| 2. யோவேல் | -யோவே.2:26 |
| 3. உங்கள் இருதயம் | -மத்.6:21 |
| 4. தீட்டுப்படுத்தும் | - மாற்.7:20 |
| 5. ஆம் | - ஆமோ.5:16 |
| 6. கர்த்தர் | - யோனா1:4 |
| 7. ஆம் | - லூக்.17:18 |
| 8. எப்பிராத்தா | - மீகா 5:2 |
| 9. பரிசுத்த ஆவியானவர் | - யோவா.16:8 |
| 10. சகரியா | - சகரி.8:16 |

**வேத அறிவுப்போட்டி:166-ல் வெற்றி பெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 2. S. தங்கம் | - கன்னியாகுமரி |
| 3. T. இராஜாத்தி | - கோம்பை |
| 4. S. லதா | - தேனி |
| 5. Sis. ராஜம்மாள் | - திருப்பூர் |
| 6. M. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 7. J. ஜான்பிரபாகரன் | - தேனி |
| 8. D. சமாதான தேவி | - தேனி |
| 9. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 10. Mrs. சாந்தா பழநி | - தர்மபுரி |
| 11. Mrs. ருக்மணிஜெயசீலன் | - தேனி |
| 12. Sis. அல்லிராணி காட்வின் | - சென்னை |
| 13. Ira. எதிராசன் | - சங்கரி |
| 14. R. ஜோஸ்வா செல்வகுமார் | - சிவகாசி |
| 15. S. சரோஜினி முத்து | - தாராபுரம் |
| 16. K. மேகன் | - குமாரபாளையம் |
| 17. Mrs. பொன்னிவிக்டர் | - தாராபுரம் |
| 18. Sis. ஸ்டெல்லா இளமதி | - தாராபுரம் |



## என்னை மறந்தது ஏனோ?



அன்பிற்கு ஏங்கும் இதயமே
உனக்கு இதயம் தந்த
இயேசுவை மறந்தாயோ?

செல்ல சீமாட்டி நீ...
வீர திருமகன் நீ...
செல்வமிழந்து வீரமிழந்து
தவிப்பது ஏன்?

உன்னை உருவாக்கினவரை மறந்தாயோ?
உன் தலைமுடியை எண்ணிப்பார்த்தவர்
உன் நினைவுகளை சோதித்து அறிந்தவர்
உன் தேவைகளை அறியாரோ?
உன சுயபெலத்தால் ஓட நினைத்து
மாண்டு கிடப்பதும் ஏன்?
நீ உருவாக தாய்மடிதந்தேன்
என் உள்ளங்கையில் உன்னை வரைந்து கொண்டேன்
பலரின் மத்தியில் உன்னை பெரியவனாக்க நினைத்தேன்
உன்னை உயிர்பெற வைக்க நான் மரித்தேன்...

இத்தனை அன்பு நான் வைத்தும் என்னை மறந்தது ஏனோ?

கவி.M.Suganya, (BE Civil Eng)

# நடப்புச்செய்திகள்...

- ஆந்திர சட்டப்பேரவையில், அந்த மாநில அரசு ஊழியர்களின் ஓய்வு வயதை 58-இல் இருந்து 60 ஆக உயர்த்துவதற்கான சட்டதிருத்தம் கொண்டுவரப்பட்டது.
- சரித்திர மற்றும் ஆவணங்களின் ஆதாரப்படி கச்சத்தீவு பண்டைய காலத்தில் ராமநாதபுரம் சமஸ்தானத்திற்கு சொந்தமானது.
- மத்திய, மாநில அரசுகள், ஒவ்வொரு ஆண்டும், கல்வித்துறைக்காக ரூ.15 ஆயிரம் கோடி ரூபாயை செலவு செய்கிறது.
- கம்பமெட்டு மற்றும் குமுளி சோதனை சாவடிகளில் 'எலக்ட்ரானிக் ஐ' எனப்படும் நவீன வாகன ஸ்கேனர் கருவி பொருத்தி கடத்தலை தடுக்க மாவட்ட போலிஸ் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.
- வளிமண்டலத்தில் உள்ள கார்பன்-டை-ஆக்சைடின் அளவை அறிவதற்கு, செயற்கைக்கோள் ஒன்றை அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் அனுப்பியிருக்கிறது.